நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper　பக்கங்கள் 04　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　Peoples Daily　மக்கள் தினசரி

நாதம் 03　திருவள்ளுவர் ஆண்டு 2023　கார்த்திகை 30　(15-12-1992)　செவ்வாய்க்கிழமை　ஓசை 301

## தபால்சேவையை சீர்செய்ய அரச அதிகாரிகள் முயற்சி

யாழ். குடா நாட்டிற்கானதபால் விநியோகத்தை சீர்செய்ய யாழ். அரச அதிபர் முயற்சி மேற்கொண்டுள்ளார். இது சம்பந்தமாக யாழ். அரச அதிபர் யாழ். குடா நாட்டு மக்களின் தபால் விநியோகம் சீர் இன்மையினால் அவர்கள் படும் கஷ்ரங்களையும் இராணுவத்தினரினால் அவர்களின் தபால்கள் உடைக்கப்பட்டுசோதனை இடப்படுவதனையும் தெரிவித்து கொழும்பு பிரதம தபால் அத்தியட்சகர் ஒஸ்ரின் பெனாண்டோவிற்கு அவசர வானொலிச் செய்தி ஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார். இதேவேளை கொழும்பில் தேங்கிக் கிடக்கும் தபால் பைகளை இங்கு எடுத்துவருவது சம்பந்தமாக கொழும்பில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி படகுகள் மீது தாக்கு நேற்றுபயணம்தடைப்பட்டது

[யாழ்ப்பாணம்]

கிளாலியில் பயணிகள் படகுகளை நோக்கி சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற் கொண்டனர். இதனால் நேற்றைய பயணம் தடைப்பட்டது. நேற்று இரவு 7 மணியளவில் கிளாலி கடற்பரப்பில் சென்று கொடிருந்த பயணிகள் படகுகளை நோக்கியே தொடர்ச்சியன பீரங்கி தாக்குதல் நடாத்தப்பட்டது.

இதனால் அனைத்து படகுகளும் திரும்பின. பெருமளவு பயணிகள் தமது பிரயாணத்தை கைவிட்டு திரும்பினர் இதேவேளை கடற்பரப்பிற்கு மேலாக உலங்குவானூர்தி ஒன்று வட்டமிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

[ச]

# தமிழ்க்குழுக்கள் அரசு மீது பாய்ச்சல்

# துரோகம் இழைத்ததாக குற்றச்சாட்டு

## தீர்வுத் திட்டம் - ஒரு கேலிக் கூத்தாம்

[கொழும்பு]

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான சமாதானத்திட்டம் என்பது அப்பட்டமான கேலிக் கூத்து என்றும் அரசாங்கம் அமைத்த தெரிவுக் குழு என்பது தமிழரைக் காட்டிக் கொடுக்க ஒரு துரோகக் குழுவாக மாறி விட்டது எனவும் கொழும்பில் இயங்கும் ஆறு தமிழ்க் குழுக்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றின் மூலம் அரசைக் கண்டனம் செய்துள்ளன.

மேலும் சமாதானத் திட்டம் எனும் பெயரில சில தீர்வுகளை பெரும்பான்மை சிங்களவர் தம்மீது திணிப்பதாக அக் குழுக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

சிங்கள அரசியல் கட்சிகளுக்கு இனப்பிரச்சினையை தீர்க்கக் கூடிய அரசியல் தீர்க்கம் இல்லை என்றும் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண என அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழு தமிழர்களை காட்டிக்கொடுத்த துரோகக் குழுவாக மாறிவிட்டது என்றும், நாடாளுமன்ற தெரிவுக்குழு அப்பட்டமான கேலிக்குழு என்றும் ஆறு தமிழ்க் குழுக்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உலகில் தற்கொலை வீதத்தில் சிறிலங்கா முன்னணியில்

(லண்டன்)

சிறிலங்காவில் கடந்த ஆண்டில் மட்டும் எட்டாயிரம் பேர் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக புள்ளிவிபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. மேலும் இவர்களில் அனேகமானோர் 14 - 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும், கிருமிநாசினி மற்றும் களைகொல்லிகள் மூலம் இவர்கள் தற்கொலை செய்து கொண்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. இவை பொலிஸ் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கைகளிலிருந்தான மதிப்பீடு என்பது குறிப்பிடத்தக்கது

ஒவ்வொரு ஒரு லட்சம் பேருக்கும் சுமார் நாற்பத்தி ஏழு பேர் தற்கொலை செய்து கொள்வதாகவும், உலகில் தற்கொலை செய்துகொள்வோரின் விகிதாசாரம் சிறிலங்காவில் தான் அதிகம் என்றும் கூறப்படுகிறது.

மேலும் இவை தவிர சிறிலங்காவின் உள்நாட்டுப் போரின் காரணமாகவும், பெருமளவு இளைஞர்கள் கொல்லப்படுவது தெரிந்ததே.

## கிழக்குப் பிராந்தியத்திற்கு புதிய பொலிஸ் அதிபர்

(கொழும்பு)

கிழக்கு பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபராக அன்ரன் ஜெகநாதனும், போதைப் பொருள் தடுப்பு பிரிவு சுப்றிண்டனாக சி. எஸ். ரட்ணாநாயக்கவும் பொலிஸ் தலைமையகத்தின் கூடுதல் பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஜயதிஸ்ஸ ஹேரத்தும் அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்சமயம் ஊவாமாகாணத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரெறி அமரசேகராவிற்குப் பதிலாக கடமையாற்றும், இந்திர டி சில்வா நலன் காப்பு பிரிவிற்கும், பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஏக்கநாயக்கா வீடமைப்பு மற்றும் கட்டட நிர்மாணப் பிரிவுக்கும், நியமிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் அதிகாரியான அமரக்கோன் நிர்வாகப் பிரிவு தலைமைச் செயலகத்திற்கும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வட-கிழக்கு இணைப்பிற்கு எதிர்ப்பு சமஷ்டி யோசனையும் நிராகரிப்பு

### தெரிவுக்குழு வாக்களிப்பின் முடிவு

(கொழும்பு)

இலங்கையில் சமஷ்டி அமைப்பு ஏற்படுத்தக் கூடாது என்பதுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கவேண்டும் எனவும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக 42 எம். பிக்களும் எதிராக மூன்று எம்பிக்களும் வாக்களித்துள்ளனர்

இத்தீர்மானம் தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம் பெற்ற இரகசிய வாக்கெடுப் பொன்றின் மூலம் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இணைக்காமலும் இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் இந்திய மாநிலங்களுக்கு உள்ளது போன்ற அதிகாரங்களை வழங்கியும இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே ஐக்கிய தேசிக் கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் முடிவு என செய்திகள் வெளியாகியமை தெரிந்ததே.

மேலும் சமஷ்டிக்கு எதிர்ப்பு தெரிவித்த இக்கட்சிகள் அதிகாரப்பரவலாக்கலுக்கான அலகு மாகாணமாகவே இருக்க வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பலாலி இராணுவ தளத்திலிருந்து அதிகாலை பலத்த எறிகணை வீச்சு

## பேரினவாதிகளை ஒன்றுசேர்த்த

என்றும், ஒருமுநாசினி மற்றும் களைகொல்லிகள் மூலம் இவர்கள் தற்கொலை செய்து கொண்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. இவை பொலிஸ் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கைகளிலிருந்தான மதிப்பீடு என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஒரு லட்சம் பேருக்கும் சுமார் நாற்பத்தி ஏழு பேர் தற்கொலை செய்து கொள்வதாகவும், உலகில் தற்கொலை செய்துகொள்

(கொழும்பு)

கிழக்கு பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபராக அன்ரன் ஜெகநாதனும், போதைப் பொருள் தடுப்பு பிரிவு சுப்ரிண்டனாக சி. எஸ். ரட்ணாநாயக்கவும் பொலிஸ் தலைமையகத்தின் கூடுதல் பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஜயதிஸ்ஸ ஹேரத்தும் அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்சமயம் ஊவாமாகாணத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரெறி அமரசேகராவிற்குப் பதிலாக கடமையாற்றும், இந்திர டி சில்வா நலன் காப்பு பிரிவிற்கும், பிரதிப் பொலிஸ் மா அதிபர் எக்கநாயக்கா வீடமைப்பு மற்றும் கட்டட நிர்மாணப் பிரிவுக்கும், நியமிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ் அதிகாரியான அமரக்கோன் நிர்வாகப் பிரிவு தலைமைச் செயலகத்திற்கும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# சமஷ்டி யோசனையும் நிராகரிப்பு

## தெரிவுக்குழு வாக்களிப்பின் முடிவு

(கொழும்பு)

இலங்கையில் சமஷ்டி அமைப்பு ஏற்படுத்தக் கூடாது என்பதுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரிக்கவேண்டும் எனவும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக 42 எம். பிக்களும் எதிராக மூன்று எம்பிக்களும் வாக்களித்துள்ளனர்.

இத்தீர்மானம் தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம் பெற்ற இரகசிய வாக்கெடுப் பொன்றின் மூலம் இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் இணைக்காமலும் இலங்கையின் ஒன்பது மாகாணங்களுக்கும் இந்திய மாநிலங்களுக்கு உள்ளது போன்ற அதிகாரங்களை வழங்கியும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதே ஐக்கிய தேசியக் கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் முடிவு என செய்திகள் வெளியாகியமை தெரிந்ததே.

மேலும் சமஷ்டிக்கு எதிர்ப்பு தெரிவித்த இக்கட்சிகள் அதிகாரப்பரவலாக்கலுக்கான அலகு மாகாணமாகவே இருக்க வேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பலாலி இராணுவ தளத்திலிருந்து அதிகாலை பலத்த எறிகணை வீச்சு

## வலிவடக்கு, மேற்கு மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து வலிகாமம் மேற்கு-வடக்கு ஆகிய பகுதி மக்களின் குடியிருப்புக்களை நோக்கி இராணுவத்தினர் அதிகாலை வேளையில் பரவலான ஷெல் மற்றும் 50 கலிபர்த் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 12.00மணிதொடக்கம் நேற்று அதிகாலை 3.00 மணிவரை மேற்படி பகுதிகளில் இருந்து தொடர்ச்சியாக இராணுவத்தினர் தாக்குதல்களை நிகழ்த்தியவண்ணமிருந்தனர்.

வலி மேற்குப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட ஷெல்கள், பண்டத்தரிப்பு, அளவெட்டி ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாகவும் வலி வடக்குப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்ட ஷெல்கள் குரும்பசிட்டி, ஏழாலை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாகவும் தெரியவருகின்றது.

எனினும் இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதவிபரம் பற்றித் தெரியவரவில்லை. மேலும் இரவு வேளையில் தொடர்ச்சியாக நடைபெற்ற இத்தாக்குதலினால் மேற்படி பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

பலாலி முகாமில் இருந்து மேற்படி பகுதிகளைநோக்கி இரவுவேளைகளில் தொடர்ந்து மூன்றாவது நாளாக

[4 ஆம் பக்கம் பார்க்க]

# பேரினவாதிகளை ஒன்றுசேர்த்த பாராளுமன்றத் தெரிவுக்குழு

## நவசமசமாஜக்கட்சி தலைவர் கண்டனம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண என அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு ஒரு ஏமாற்று என்று நவசமசமாஜகட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

"இக்குழு தமிழர்களை நசுக்கப்பார்க்கிறது. இந்த தெரிவுக்குழு மூலம் சிங்கள இன ஆதிக்கவாதிகள் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளார்கள் இதன்மூலம் மிதவாத தமிழ்க்குழுக்கள் கூட இனி மறைமுகமாக புலிகளுக்கு உதவக் கூடும்.

தற்போதைய சமாதான முயற்சிகள் தோல்வி கண்டிருப்பதன் மூலம் சர்வதேச ரீதியிலான சக்திகள் இனப்பிரச்சினைவிடயத்தில் தலையிடலாம்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வல்வெட்டித்துறை மீது இரவு நேர ஷெல்தாக்கு

### பெண் மணி காயம்; வீடுகள் சேதம்

(வடமராட்சி)

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 7 30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் வல்வெட்டித்துறை பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

பலாலியிலிருந்து ஏவப்பட்ட மூன்று ஆட்லறி ஷெல்கள் வல்வெட்டித்துறைப் பகுதிகளில் விழுந்து வெடித்ததில் ஒரு குடும்பப் பெண் காயமடைந்தார். இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## திருமலையில் இராணுவம்

# பதுங்கியிருந்து தாக்கியதில் 2 பொதுமக்கள் பலி

திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலினால் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

கடந்த 13 ஆம் திகதி காலை 8.30மணியளவில் திருக்கோணமலை சேனையூர் கிரவல்குழி என்னும் இடத்தில் பதுங்கியிருந்த இராணுவத்தினரே இவ்வாறு தாக்குதலை மேற்கொண்டனர் இதனால் மூதூரைச் சேர்ந்த முத்தையா தயானந்தன் [வயது 22[ கட்டைப்பறிச்சானைச் சேர்ந்த தாமோதரம் தர்மலிங்கம் [வயது 30] ஆகிய இருவருமே பலியானவர்களாவர்.

## வீரச்சாவு



வீரவேங்கைமுதல்வன்
[ஞானவேல்]

11 - 08 - 1992 அன்று அலம்பில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரவேங்கை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## குரும்பசிட்டி, மயிலங்காட்டில்

# ஷெல் தாக்குதல் ஆறுபேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் இரவுவேளை மக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஆறுபேர் படுகாயமடைந்தனர்.

நேற்றிரவு 7 மணியளவில் பலாலி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து மயிலங்காடு பகுதி நோக்கி ஏவப்பட்ட எறிகணை வீழ்ந்து வெடித்ததில் நவரட்ணம பாஸ்கரன் வயது 28) என்பவர் படுகாயமடைந்தார். தொடர்ந்து இரவு 10.30 மணியளவில் குப்பிளான்பகுதி நோக்கி ஏவப்பட்ட எறிகணையால் குப்பிளான் தெற்கைச் சேர்ந்த இளையதம்பி செய்வானை (வயது 55), இவரது மகளான பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆசிரியை பராசக்தி வயது 29), சகோத

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடைவிடா விமான இரைச்சல்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டின் வான் பரப்பில் விமானப்படை விமானங்களின் நடமாட்டம் நேற்று அதிகரித்துக் காணப்பட்டது.

நேற்றுக் காலை முதல் மாலை வரை ஒன்றுக்கு மேற்பட்ட விமானங்கள் பல தடவை பலாலியில் தரையிறங்கி சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை உலங்குவானூர்தி ஒன்று பல தடவை கல மான் தீவில் தரையிறங்கி சென்றது. இது பலாலியிலிருந்து மான் தீவிற்கு இராணுவத்தினரை இடமாற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

## 'கந்துல' மீட்பு

புத்தளம் கற்பிட்டி கடலில் கடந்த ஒக்டோபரில் மூழ்கிய 'சந்துல' கடற்படைக் கப்பல் கடந்த வியாழனன்று கொழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை படையினரை ஊக்குவிக்க அமைச்சர் குழு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா படையினரின் சேமநலன்களைக் கவனிக்கவென அமைச்சர் குழுவொன்று அங்கு விஜயம் செய்துள்ளது.

இக்குழுவிற்கு மாகாண சபைகள் அமைச்சரும் வெளிவிவகார ராஜாங்க அமைச்சருமான ஜோன் அமரதுங்க தலைமை வகித்தார்.

குழுவினர் கட்டைபறிச்சான, நிலாவெளி பெரியகுளம், ஆண்டாமோட்டை, சீனக்குடா முதலிய இடங்களிலுள்ள முகாம்களுக்கு விஜயம் செய்தனர்.

பிரதிசபாநாயகர் காமினி பொன்சேகா சந்திரசிறி சூரியாராச்சி, சந்திரமன் டீசில்வா, சந்திரதாச கலப்பதி, விஜசன் ஜெயவர்த்தன ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளர் எயர்சீவ்மார்சல்வோல்டர் பர்னான்டோவும் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

# மட்டக்களப்பு கிராமங்களில் குடியிருப்புகள் படையால் எரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறி மக்களின் குடியிருப்புகளுக்குள் நுழைந்த சிறிலங்கா இராணுவத்தினர் பல பொதுமக்களைக் கைது செய்ததுடன் வீடுகளையும் எரித்து நாசமாக்கியுள்ளனர்.

கடந்த பத்தாம் திகதி அதிகாலை மட்டக்களப்பு வவுணதீவு, ஆயித்தியமலை, 19-ம் கட்டை, 36 ஆம் கிராமம், வெல்லாவெளி, பாலையடிவெட்டை, பழுகாமம், கொக்கட்டிச்சோலை இராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய இராணுவத்தினரே மேற்படி செயலில் ஈடுபட்டனர்.

இவர்கள் பாவற்கொடிச்சேனை, தாண்டியடி, பன்சேனை, 40-ம் கிராமம், திக்கோடை தும்பன்கேணி, மணல்பிட்டி, சாமந்தி ஆறு ஆகிய பகுதிகளால் முன்னேறி அவ்விடங்களில் பல பொதுமக்களின் குடியிருப்புகளை எரித்துச் சாம்பராக்கியதுடன் அங்கிருந்த பல பொதுமக்களையும் கைது செய்தனர். மேலும் அந்தக்கிராமங்களிலேயே தற்பொழுதும் தரித்து நிற்கின்றனர்.

## வரி விளம்பரம்

### சைச்சங்கிலி தவறிவிட்டது

தங்கச் சைச்சங்கிலி ஒன்று யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில், புத்தூர், இருபாலைச் சந்திக்கும், இருபாலை ஆரிய குளம். ஸ்ரான்லி றோட் ஆகியவற்றிற்கு இடையில் தவறி விட்டது. கண்டு எடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்
(3782)

### டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல பணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### விற்பனைக்கு

"SONY TV, MV.300 டெக், கொண்டா 500 ஜெனரேட்டர் உதிரிப்பாக விற்பனைக்குண்டு தொடர்பு: T. மனோசரன் C/O தம்பித்துரை அம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை. (3783)

### பராமரிக்கும் பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் சென். பற்றிக்ஸ் வீதியின் ஓரமாக மாவீரர் தினத்தில் நடுகை செய்யப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பொறுப்பை யாழ். சென். றோக் சன சமூக நிலையம் ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிய வருகிறது. (42)

### ஓய்வூதியதிட்டம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

சகல தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கும், பனம் தொழில் வல்லுநர்களுக்கான ஓய்வூதிய பாதுகாப்பு நலன் புரித திட்டம் ஒன்று அறிமுகம் செய்து

திருமலை மாவட்டத்தில் இராணுவத்தினர் வழங்கும்

# விசேட அடையாள அட்டைகள் மட்டுமே செல்லுபடியாகுமாம்

(திருக்கோணமலை)

சிறிலங்காவின் தேசிய அடையாள அட்டைகள் திருக்கோணமலை மாவட்டத்தில் செல்லுபடியாகாது இராணுவ அடையாள அட்டைகள் மட்டுமே அங்கு செல்லுபடியாகும்.

மேற்படி இராணுவ அடையாள அட்டைகளை வழங்கும் விடயத்தில்கூட திருமலைத் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

இராணுவ முகாம்களில் வைத்து வழங்கப்படும் இவ் அடையாள அட்டைகள் சிங்களை. முஸ்லிம் மக்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது இங்கும் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதால் திருமலைத் தமிழ்மக்கள் தமது அன்றாட கடமைகளுக்காக மேற்படி மாவட்டத்தில் நடமாட முடியாத நிலை நீண்ட காலமாக நிலவுகிறது.

## சுயதொழில் முயற்சிக்கடன் சர்வோதயம் வழங்கும்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால இராணுவ அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து சுய தொழில் இழந்துள்ளவர்களுக்கு தொழில் ஊக்குவிப்பிற்காக கடன் வழங்க சர்வோதயம் முன்வந்துள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்து கப்டன் றோய் அகதிகள் முகாமில் தங்கியுள்ள சுமார் 42 குடும்பங்களைச் சேர்ந்த 32பேருக்கு சுய தொழிலுக்காக ரூபா 5000/- வழங்கும் நிகழ்ச்சி நாளை கப்டன் றோய் குடியிருப்பில் இடம்பெறவுள்ளது.

### மீனவர் நிவாரணம் வழங்கப்படுகிறது

(யாழ்ப்பாணம)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 500 மீனவக் குடும்பங்களுக்கு தற்போது ஒருவாரத்திற்கான இலவச நிவாரணம் சங்கானை ப. நோ. கூ. ச. கிளைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. (42)

## சம்பளக் காசோலை மோசடி பாடசாலை அதிபர் கைது

சம்பளக் காசோலையில் மோசடி செய்த பாடசாலை அதிபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ்ப் பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் கடந்த மாதம் சம்பளத்திற்கு வழங்கப்பட்ட காசோலையில் 4686/78 எனக் குறிப்பிட்டிருந்த தொகையை 14686/78 என மாற்றியிருந்தமை கண்டுபிடிக்கபபட்டதாகவும், அதைத்தொடர்ந்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### ஜப்பான் நிதி உதவி

இந்தியாவிலிருந்து திரும்பிக் கொண்டிருக்கும் அகதிகளின் தேவைக்கென ஜப்பான் சுமார் 9 இலட்சம் ரூபா நிதி உதவி செய்ய சம்மதித்துள்ளது. இந் நிதி அகதிகளுக்கான ஐ.நா.குழுவினரிடம் வழங்கப்படும் என தெரிவிக்கபபடுகிறது.

## போஷாக்கு திட்டத்தை சர்வோதயா இடைநிறுத்தம்

போதியளவு பாலுணவுப் பொருள்கள் கையிருப்பில் இன்மையால் சர்வோதயா அமைப்பின் போஷாக்கு திட்டம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இப் போஷாக்கு திட்டத்தின் கீழ் போஷாக்கு குறைந்த சுமார் 3462 பேர் பாலுணவு பொருள்களைப் பெற்று வந்தவர் என்பது தெரிந்ததே. சுமார் 75 பாலர் பாடசாலை பால் வழங்கும் திட்டமும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

முன்னர் சர்வோதயா அமைப்பினர் கொழும்பிலிருந்து தாமே நேரடியாகப் பெற்று வந்த பாலுணவுப் பொருள்கள் தற்போது அரசாங்க அதிபர் ஊடாகப்பெற வேண்டி ஏற்பட்டதாலேயே பாலுணவு கையிருப்பில் இல்லாத நிலை தோன்றியதாக

### வர்த்தக சங்க அலுவலகம் திறப்பு

(வடமராட்சி)

நெல்லியடிப் பகுதி வர்த்தகர்களுக்கான வர்த்தகர் சங்க அலுவலகம் ஒன்று. வர்த்தகர் சங்கத் தலைவர் தலைமையில் [illegible] நெல்லியடியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி வர்த்தகர்கள். இலங்கை வங்கி, மக்கள்வங்கி முகாமையாளர்கள் பிரதிநிதிகள், வர்த்தகர் சங்க சம்மேளனப் பிரதிநிதிகள் மற்றும் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு எஸ் அரசண்ணா உட்படபலரும்கலந்து கொண்டனர். (யோ)

## கொழும்பில்இளைஞர்கைது மேலும் தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறத்திலும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் 20 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளதாக கொழும்பு பொலிஸ் குற்றவியல் புலன் விசாரணை அதிகாரி ஒருவர் "திவயின" பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இந்த இருபது பேரில் பெண்கள் 6 பேர் அடங்குவதாகவும் இவர்கள் கிருளைப்பனை கறுவாக்காடு. மூகத்துவாரம், கொட்டாஞ்சேனை, கோட்டை, புறக்கோட்டை, வெள்ளவத்தை பகுதிகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### விண்ணப்ப படிவங்கள் கைவசமில்லை

(வடமராட்சி)

வடமராட்சி பகுதி கிராம சேவைஉத்தியோகத்தர் பிரிவு அலுவலகங்களில் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் படிவங்கள் எதுவும் இல்லாததால் பரீட்சை எழுதவிருக்கும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாத அவல நிலையில் உள்ளனர்.

தற்போது கிராம சேவை உத்தியோகத்தர்களிடம் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல், புதுப்பித்தல் திருத்தம் செய்தல், மீளப்பெறுதல் சம்பந்தமான நான்கு முக்கிய படிவங்களும் கைவசம் இல்லை எனத் தெரியவருகிறது.

### ஜன்மதினம் அனுஷ்டிக்கப்படும்

(வடமராட்சி)

பருத்தித்துறை தாய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 140ஆவது ஜன்மதினம் எதிர்வரும் 16ஆம் திகதி புதன் கிழமை பருத்தித்துறை சேவாச்சிரமத்தில் சுவாமி சித்ரூபானந்தா அவர்களினால் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப் படவுள்ளது. (யோ)

### சின்னக் கருவேலம் விதைகள் தூவப்படுகின்றன.

சின்னக் கருவேலம் விதைகள் தூவுவதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஈடுபட்டுள்ளது.

அதிவேகமாக வளரக்கூடியதும், உலர், உவர் தன்மைகளைத் தாங்கிவளர்வதுடன் அத்தகைய நிலங்களை நன் நிலங்களாக மாற்றக் கூடியதும், விறகுத் தேவைக்கு பயன்படுத்தக்கூடியதுமான சின்னக் கருவேலம் மரங்கள் வளர்வதற்காகவே இவ்விதைகள் தூவப்பட்டு வருகிறது.

1986 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட கருவேலம் மரவிதைகள் மன்னார் மாவட்டத்தில் தூவப்பட்டன. மன்னார் பகுதியிலிருந்து பெறப்பட்ட சுமார் எண்பதாயிரம் ரூபா பெறுமதியான சின்னக் கருவேலம் விதைகள் வல்லைவெளி. நாவற்குழி வெளிப்பகுதிகளில் தற்போது தூவப்பட்டுள்ளது.

இதேபோல மணலாறு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலும் பொருத்தமான இடங்களில் இவ் விதைகள் தூவப்படும்.

### பாலர் கலைவிழா

கோப்பாய் பகுதியில் சர்வோதயம் அமைப்பின் அனுசரணையுடன் நடத்தப்படும்

## பொதுசன உதவிப்பணம் பெறுநர் பட்டியல்திருத்தம்

(வடமராட்சி)

சமூக சேவை திணைக்களத்தினால் பருத்தித்துறை பிரதேச செயலகம்மூலம் வழங்கப் படும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களது பட்டியல் மீளாய்வு செய்யப் படவுள்ளது.

அந்தந்தப் பகுதி கிராம சேவை உத்தியோகத்தகர் அலுவலகத்தில் அதற்குரிய படிவங்களைப் பெற்று பூரணமாக நிரப்பியதன் பின்னர் அந்தந்த பகுதி கிராம சேவை உத்தியோகத்தரிடம் வழங்கப்படல் வேண்டும்.

மேற்குறித்த நடவடிக்கைகள் அடுத்த வாரம் மட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக புலோலி மத்தி கிராம சேவை உத்தியோகத்தர் திரு. கே. சண்முகநாதன் தெரிவித்தார். (யோ)

## ஐ. தே. க. மாநாட்டில் குமார் கலந்து கொள்ளார்

(கொழும்பு)

இம்மாதம் இருபதாம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற இருக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் 38ஆவது வருடாந்த மாநாட்டில் தம்மால் பங்குபற்ற இயலாது என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளரான குமார் பொன்னம்பலம் கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான சிறிசேன குரேக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் ஐ தே கவும், அரசும் தம்மையும், தமது கட்சியையும் இழிவுபடுத்தும் பிரசாரத்தில் ஈடுபட்டமையினாலேயே தான் இம் மாநாட்டில் கலந்து கொள்ள இயலாதிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

### பொதுக் கூட்டம்

(வடமராட்சி)

அல்வாய் தெற்கு பாரதி தாசன் சனசமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் எதிர் வரும் 24ஆம் திகதி காலை 9 மணிக்கு நிலைய மண்டபத்தில நடைபெறும் (யோ)

### வகுப்புக்கள் ஆரம்பம்

நெல்லியடி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் நடாத்தப்படவுள்ள ஆண்களுக்கான தையல் பயிற்சி வகுப்புக்கு விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேற்குறித்த அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்படுகிறது (யோ)


பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம் [வ/து]

**பங்குப் பணம்-ரூபா 100/-**

1992-03-06இல் திருத்தியமைக்கப்பட்ட கூட்டுறவுச் சட்டத்தின்படி உபவிதி 18(1)க்கு அமைவாக ஒரு பங்கின் பெறுமதி ரூபா. 100/- ஆகும். எனவே சகல அங்கத்தவர்களும் தமது பங்கினை ரூபா. 100/- ஆக வைத்திருக்கத் தவறும்பட்சத்தில் கிளைக்குழுக் கேர்தலிலோ, பொதுச் சபையிலோ, நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்கமுடியாது எனவே 1993-03-05க்கு முன்னர் தங்கள் பங்குத் தொகையை ரூபா. 100/-ஆக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ச. கந்தசாமி
தலைவர்
1992-12-11

செ. செல்வராசா
செயலாளர்

(சி-5589)


## நினைவு கூருகின்றோம்...

**1992-12-15**

1985-ம் ஆண்டு இதே தினத்தில், ஒத்காச்சிமடம் பகுதியில் வீதிச்சோதனையில் ஈடுபட்ட சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில்

## பொறுப்பேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் சென். பற்றிக்ஸ் வீதியின் ஓரமாக மாவீரர் தினத்தில் நடுகை செய்யப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பொறுப்பை யாழ். சென். றோக் சன சமூக நிலையம் ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிய வருகிறது. (42)

## ஓய்வூதியதிட்டம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

சகல தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களுக்கும், பனம் தொழில் வல்லுநர்களுக்கான ஒய்வூதிய பாதுகாப்பு நலன் புரித திட்டம் ஒன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

45வயதிற்கும் 59வயதிற்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (42)

## நாடகப் போட்டி முடிவுகள்

எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் நடத்திய நத்தார் நாடகப் போட்டி மறைக்கல்வி நடு நிலையத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் முதல் பரிசை பாரதி இளைஞர் அறிவியற் கழகம் தயாரித்த 'ஒளியைத் தேடி' என்னும் நாடகம் தட்டிக்கொண்டது இரண்டாவதுபரிசை புனிதஆரோக்கிய நாதர் நாடகக் குழுவினர் தயாரித்த 'உண்மை ஒளியைத் தேடி' என்னும் நாடகமும், மூன்றாவது பரிசை சென் சார்ள்ஸ் மகா வித்தியாலய மாணவரின் 'மாற வேண்டிய மனங்கள்'' என்னும் நாடகமும் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரிய ஆலோசகர் ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மற்றும் கோட்ட மட்டத்திலான சகல துறைகளையும் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர்களுக்கான ஒன்று கூடலொன்று எதிர்வரும் பதினெட்டாம் திகதி வெள்ளிக்கிழமையன்று கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணத்தில் ''ஆசிரிய ஆலோசகர் நலன் பேண் சங்கம்'' அமைப்பதற்கான நிர்வாகிகளும் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனவே சகல ஆசிரிய ஆலோசகர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி யாழ். கல்வித்திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சம்பளத்திற்கு வழங்கப்பட்ட காசோலையில் 4686/78 எனக் குறிப்பிட்டிருந்த தொகையை 14686/78 என மாற்றியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதைத்தொடர்ந்து

... தவி செய்ய சம்மதித்துள்ளது. இந் நிதி அதிகளுக்கான ஐ நா. குழுவினரிடம் வழங்கப்படும் என தெரிவிக்கபபடுகிறது.

## போஷாக்கு திட்டத்தை சர்வோதயா இடைநிறுத்தம்

போதியளவு பாலுணவுப் பொருள்கள் கையிருப்பில் இன்மையால் சர்வோதயா அமைப்பின் போஷாக்கு திட்டம் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இப் போஷாக்கு திட்டத்தின் கீழ் போஷாக்கு குறைந்த சுமார் 3462 பேர் பாலுணவு பொருள்களைப் பெற்று வந்தவர் என்பது தெரிந்ததே. சுமார் 75 பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த 2939 பிள்ளைகளுக்கான இடை நேர பால் வழங்கும் திட்டமும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

முன்னர் சர்வோதயா அமைப்பினர் கொழும்பிலிருந்து தாமே நேரடியாகப் பெற்று வந்த பாலுணவுப் பொருள்கள் தற்போது அரசாங்க அதிபர் ஊடாகப்பெற வேண்டி ஏற்பட்டதாலேயே பாலுணவு கையிருப்பில் இல்லாத நிலை தோன்றியதாக சர்வோதயாவின் ஒரு அதிகாரி குறிப்பிட்டார்.

## புத்தளம் புகை வண்டியில் வெடிகுண்டுப் புரளி

(கொழும்பு)

புத்தளம் சீமெந்துக் கூட்டுத் தாபனத்திற்கு சீமெந்து ஏற்றச் சென்ற புகையிரத பெட்டியொன்றில் குண்டு இருப்பதாகக் கூறப்பட்டதையடுத்து தொழிலாளர்கள் ஓட்டமெடுத்தனர்.

கொழும்பிலிருந்து புத்தளம் சீமெந்து கூட்டுத் தாபனத்திற்கு சீமெந்து ஏற்றச் சென்ற புகையிரத வண்டியின் ஒரு பெட்டியில் கவனிப்பாரற்ற பொதி ஒன்று இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. இப் பொதியில் வெடிகுண்டு இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டதையடுத்து வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப் பட்டனர். பின்னர் அது பரீட்சித்துப் பார்க்கப்பட்டபோது சிங்கள திரைப்படம் ஒன்றின் வீடியோப் பிரதிதான் அது என்பது தெரியவந்தது.

## தப்பியோடிய சிப்பாய் வழிப்பறியில் ஈடுபாடு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் இருந்து தப்பியோடிய சிங்களச் சிப்பாய் ஒருவர் வழிப்பறிக் கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் சம்பந்தப்பட்டிருக்கிறார்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தங்காலைபஸ் நிலையத்தில் இருந்து பயணிகளுடன் பஸ் வண்டியொன்று துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டது. இவ்வாறு கடத்திச் செல்லப்பட்ட பஸ் பயணிகளிடமிருந்து பெறுமதி வாய்ந்த பல பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன. கொள்ளைக் கோஷ்டியில் இருந்த ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர். இவரிடமிருந்து ஒரு பகுதி பணம், நகைகள் ஆகியவற்றை பொலிசார் மீட்டுள்ளனர்.

இக்கொள்ளைக் கோஷ்டியில் ஒருவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் என்பது இவர் மூலமாகவே தெரிய வந்தது.

மேற்படி கொள்ளைக் கோஷ்டியினர் பாவித்து வந்த ரி-56 ரக துப்பாக்கியும் சிறிலங்கா இராணுவத்துக்குச் சொந்தமானதே என்று கருதப்படுகிறது.

மேற்படி சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.

## இம்மாத முடிவிற்குள் க. பொ. த (உ/த) பரீட்சை முடிவுகள்

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் டிசம்பர் மாத இறுதிக்குள் வெளிவருமென பரீட்சை ஆணையாளர் கூறியுள்ளார்.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற இப் பரீட்சையில் சுமார் இரண்டரை லட்சத்திற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கிராம சேவை உத்தியோகத்தர்களிடம் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தல், புதுப்பித்தல் திருத்தம் செய்தல், மீளப்பெறுதல் சம்பந்தமான நான்கு முகபடிவங்களும் கைவசம் இல்லை எனத் தெரியவருகிறது.

## ஜன்மதினம் அனுஷ்டிக்கப்படும்

(வடமராட்சி)

பருத்தித்துறை தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 140ஆவது ஜன்மதினம் எதிர்வரும் 16ஆம் திகதி புதன் கிழமை பருத்தித்துறை சேவாச்சிரமத்தில் சுவாமி சித்ரூபானந்தா அவர்களினால் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப் படவுள்ளது. (யோ)

## மினிபஸ் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு

புத்தளம் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் கடந்த வாரத்தில் தனியார் பஸ் வண்டி ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதனால் இரண்டு பயணிகள் காயங்களுக்கு இலக்காகினர். பஸ் வண்டிக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக புத்தளம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுப் பகுதியினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

...கள் தூவப்பட்டு வருகிறது.

1986 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட கருவேலம் மரவிதைகள் மன்னார் மாவட்டத்தில் தூவப்பட்டன. மன்னார் பகுதியிலிருந்து பெறப்பட்ட சுமார் எண்பதாயிரம் ரூபா பெறுமதியான சின்னக் கருவேலம் விதைகள் வல்லைவெளி. நாவற்குழி வெளிப்பகுதிகளில் தற்போது தூவப்பட்டுள்ளது.

இதேபோல மணலாறு. வவுனியா, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களிலும் பொருத்தமான இடங்களில் இவ் விதைகள் தூவப்படும்.

## பாலர் கலைவிழா

கோப்பாய் பகுதியில் சர்வோதயம் அமைப்பின் அனுசரணையுடன் நடத்தப்படும் பாலர் பாடசாலையினர் நடத்தும் பாலர் கலைவிழா எதிர்வரும் புதனன்று நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இவ்வைபவத்தில் கோப்பாய் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

## நாவலர் குருபூசை

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் மன்ற அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தலைமையில் நல்லூர் ஸ்ரீ சட்டநாத ஸ்வாமி தேவஸ்தானத்தில் இன்று மாலை 4 மணியளவில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை விழாவைக் கொண்டாடவுள்ளனர்.


### வாசகர்களே! மாணவர்களே!

உங்கள் கவலை இது தானே?

❋ தரமான புத்தகங்கள் இல்லை,
❋ இருந்தாலும் பெறுவதற்கு பணம் இல்லை

### கவலையை விடுங்கள்...

❋ நீங்கள் படித்த புத்தகங்களைக் கொடுத்து
❋ வேறு புத்தகங்கள் பெறலாம்.

அரிதான பழைய, புதிய தமிழ், ஆங்கில மற்றும் பாடசாலை புததகங்கள் பெற்றுக் கொள்ள

### யாழ்.பழைய புத்தகக்கடை

(விவேகானந்தா அச்சகம் முன்பாக)

அருச்சுனா (ஸ்ரான்லி) வீதி, யாழ்ப்பாணம்.

(3784)


...கத்தவர்களும் தமது பங்கினை ரூபா. 100/- ஆக வைத்திருக்கத் தவறும்பட்சத்தில் கிளைக்குழுக் கோர்தலிலோ. பொதுச் சபையிலோ, நெறியாளர் குழுவிலோ பிரதிநிதித்துவம் வகிக்கமுடியாது எனவே 1993-03-05க்கு முன்னர் தங்கள் பங்குத் தொகையை ரூபா. 100/-ஆக வைத்திருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ச. கந்தசாமி
தலைவர்
1992-12-11

செ. செல்வராசா
செயலாளர்

(சி-5589)

## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-15

1985-ம் ஆண்டு இதே தினத்தில், ஒந்காச்சிமடம் பகுதியில் வீதிச்சோதனையில் ஈடுபட்ட சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ குஞ்சுத்தம்பிதங்கவேல் (பாண்டிருப்பு கல்முனை)

இதே சம்பவத்தின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

★ சாந்தன் (இராமக்குட்டி சாந்தகுமார் - பாண்டிருப்பு, கல்முனை-)

1986-ம் ஆண்டு வீரச்சாவெய்திய-

★ சங்கரப்பிள்ளை இராசரட்ணம் (அக்கரைப்பற்று)

1987-ம் ஆண்டு பொலநறுவைப்பகுதியில், சிறிலங்காப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

லெப்.சுதன் (கந்தசாமி லோகநாதன் கள்ளிமேடு தம்பலகமம் - திருக்கோணமலை)

முல்லைத்தீவு- 4-ம் கட்டைப் பகுதியில், இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

கப்டன் திருச்செல்வம் (அந்தோனி குரூஸ் அல்போன்ஸ் - செல்வபுரம் முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லபபட்ட 10- தமிழர்கள்.

1988-ம் ஆண்டு வடமராட்சி கிழக்கு- உடுத்துறைப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றி வளைப்பின்போது சயனைட் உடகொண்டு வீரச்சாவெய்திய-

வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர்-

கப்டன் ராஜாராம் (வீரகத்திப்பிள்ளை தர்மலிங்கம் முள்ளியான். வெற்றிலைக்கேணி- யாழ் )

இதே ஆண்டு தேசவிரோதிகளினால் பிடிதது்ச் செல்லப்பட்டுக் கோப்பாயில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட-

நாட்டுப்பற்றாளரான-

அரசலிங்கம தேவதாசன் (ஊரெழு)

சுன்னாகத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இணுவிலைச் சேர்ந்த தமிழ் விவசாயி.

1990-ம் ஆண்டு நாரந்தனை, செருக்கன் சந்தியில் சிறிலங்காப்படையினர் விமானததிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டமாவீரர்ஈரோஸ் அமைப்புஇயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி-5587]

### சிந்தனைக்கு

குதிரைத் தாவிப்பாயும் நேரத்தில் இழுத்துப் பிடிப்பதுதான், வாழ்வின் தோல்விகளில் பாதிக்கு காரணம்.

— சார்லஸ் ஹோர்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 15-12-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2(23
த. பெ. எண் - 05


## புலிகளின் நிலைப்பாடு வரலாற்றின் வெளிப்பாடு

இனப்பிரச்சினையில், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானதே என மீண்டும் ஒருமுறை உணர்த்தப்பட்டுள்ளது. சிங்கள அரசியற் கட்சிகள் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின்முன் வைத்துள்ள மாகாண சபைத் திட்டங்களும், கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் போகும் வழி தெரியாது தட்டித் தடுமாறுவதும், தமக்குள் குத்து வெட்டுப்படுவதும் இதனை உணர்த்தப் போதுமானவையாகும்.

ஈ. பி. ஆர். எல். எவ். குழுவைச் சேர்ந்த யாழ். மாவட்ட எம். பி. பிரேமச்சந்திரன், பாராளுமன்றத் தெரிவுக்குழு எந்தத் தீர்மானத்திற்கும் வர முடியாமல் தோல்வியில் முடிவடைந்தமை விடுதலைப் புலிகளின் செல்வாக்கை மேலும் அதிகரிக்கச் செய்யும் எனத் தெரிவித்துள்ளார். அதாவது, விருப்பியோ விருப்பம் இன்றியோ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு சரியானது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டுள்ளது எனலாம்.

தமிழரின் மீதான அடக்கு முறையும், அதற்கெதிரான போராட்டமும் - சாத்வீகப் போராட்டங்கள் உட்பட - இன்று நேற்று தொடங்கியதல்ல. அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் புலிகளும் அல்ல. தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் வரலாற்றின் கட்டாயத்தினால், தவிர்க்கப்பட முடியாமல் உருவானது. அவ்வாறு உருவான போராட்டம் சாத்வீக வழியில் இருந்து ஆயுதப் போராட்டமாக மாறும் நிலை உருவான போது அதற்கு தலைமை தாங்கியவர்களே விடுதலைப் புலிகள். அதாவது வரலாற்றின் நிர்ப்பந்தத்தால் உருவான ஆயுதப் போராட்டத்திற்கு விடுதலைப் புலிகள் தலைமை தாங்கி நடத்தி வருகின்றனர்.

இதே போல், தமிழரின் தனி நாட்டுக் கோரிக்கையும் தவிர்க்க முடியாத ஒன்றாக, தமிழரின் பாதுகாப்பிற்கு ஒரே ஒரு மாற்றீடு தனிநாடு அமைத்தல் என்ற நிர்ப்பந்தத்தினால் உருவானதே. அதாவது, மொழியுரிமை, சமஷ்டி அமைப்பு, தனிநாடு எனபடிமுறை வளர்ச்சியின் பால் வந்ததே

# வெகுசன தொடர்பு சாதனங்களை அரசு துர்ப்பிரயோகம் செய்கிறது

### உப சபாநாயகர் காமினி பொன்சேகா சாடல்

பொதுமக்களுக்கு எதையும் வெளிபடுத்தாமல் அரசு பொதுமக்களை இருட்டில் வைத்துக்கொண்டிருக்கிறது என்று பிரதிச்சபாநாயகரும் மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான காமினி பொன்சேகா தனது கட்சி மீதே குற்றம் சாட்டியுள்ளார். வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள உண்மையான நிலைமையும், படைகளின் இழப்புக்களையும், போர் முனையில் படையினர் தண்ணீர் மற்றும் உணவுப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதையும் அரசு கட்டுப்பாட்டிலுள்ள வெகுசனத் தொடர்பு சாதனங்கள் வெளியிடத் தவறிவிட்டன என்று தொடர்புச் சாதனங்களைத் துணிச்சலோடு சாடியுள்ளார்.

அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் போல் அரசு ரூபவாஹினியை சுதந்திரமான ஒரு குழுவின் மேற்பார்வையில் இயங்க அனுமதிக்க வேண்டும் என்று கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவர் ஏலவே அரசுக்கு ஆலோசனை கூறியிருந்தார். அதற்குப் பிறகு அரச கட்டுப்பாட்டில் உள்ள தொடர்பு சாதனம் மீது தெரிவிக்கப்பட்ட மிகக்கடுமையான தாக்குதல் காமினி பொன்சேகாவின் எதிர்பாராத இத் தாக்குதலாகும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

பத்திரிகை மற்றும் எலெக்றோணிக் தொடர்புச் சாதனங்கள் மீது அரசு வைத்திருக்கும் கட்டுப்பாட்டை நீக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி ஜனவரியில் ஜப்பானியத் தூதுவர் ஐலன்ட் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

### நிதி உதவி

சிறிலங்காவுக்கு உதவும் நாடுகளில் முன்னணியில் நிற்கும் நாடான ஜப்பான், தனது நாட்டின் உதவியைப் பெற்ற ரூபவாஹினி குறித்து அதிக அக்கறை கொண்டிருந்தது.

சிறிலங்கா அல்லது வளரும் நாடுகளில் தொடர்புச்சாதனங்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும் என்ற கருத்தை ஜப்பான்யத் தூதுவர் இஸாமு தன்யனாக முன் வைக்கவில்லை.

எதிரும் புதிருமான இருதரப்புச்செய்திகளையும்தெரிந்து கொள்ள வேண்டியது மக்களின் உரிமை என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் அரசின் முக்கியஸ்தரான காமினி பொன்சேகாவேதெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார் அபிவிருத்தி அடைந்து வரும் சமூகத்தில் தொடர்புச் சாதனங்களின் பங்குப்பணி முக்கியமானது என்று தாராளமான போக்குடையவர்கள் நம்புகிறார்கள். சுதந்திரமான பத்திரிகைகளும், எலெற்றோணிக் செய்திச் சாதனங்களும் சமூகத்தின் வளர்ச்சிக்கும் உறுதிச் சமநிலைக்கும் அவசியமானவை என்று அவர்கள் கருதுகிறார்கள்.

ரூபவாஹினி, சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் தகவல் திணைக்களம் சம்பந்தமான அரசின் கொள்கை தவறானது என்று காமினி பொன்சேகா கூறியிருப்பது அரசு தரப்பில் பலரின் ஆத்திரத்தைத் தூண்டியுள்ளது.

அபாயகரமான யுத்த நிலைமையையும், புலிகளின் அச்சுறுத்தலையும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் அரசு இருப்பது குறித்து காமினி பொன்சேகா திருப்திப்படவில்லை. அத்துடன் அரசு ஆதரவுடன் நடைபெறும் களியாட்ட விழாக்கள், விளையாட்டுக்கள் கேளிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் படியும் அவர் வேண்டியிருந்தார்.

ஐ. தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிலர் தனிப்பட்ட முறையில் காமினி பொன்சேகாவைத் தட்டிக் கொடுத்தார்கள். தனது கட்சியின் தவறுகளை பகிரங்கமாகவே விமர்சித்த காமினியை வெளிப்படையாகப் பாராட்டி அவர்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொள்ள விரும்பவில்லை.

அரச கட்டுப் பாட்டின் கீழ் உள்ள தொடர்புச் சாதனங்கள், என்ன காரணமோ தெரியாது, காமினியின் விமர்சனங்களைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாதது போல் கைவிட்டன. ஒரு பகுதியினர் காமினி மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கோரினர். எந்தச் சூழ்நிலையிலும் அரசின் நடவடிக்கைகளையும், தகவல் தொடர்பையும், யுத்தம் சம்பந்தமான அரசின் கொள்கையையும் காமினி விமர்சித்திருக்கக் கூடாது என்று அவர்கள் கருதுகிறார்கள். அராலி முனையில் ஆகஸ்ட் 8ஆம் திகதி லெப். ஜெனரல் கொப்பேகடுவவும் அதிகாரிகளும் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து திருமதி லலி கொப்பேகடுவ சர்வதேச மட்டத்திலான விசாரணைக் குழுவை நியமிக்கும்படி கேட்டுள்ளதால் அரசியல் மற்றும் இராணுவ நிலைமைகள் மோசமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

காலாட் படைகளினாலும் மக்களாலும் யுத்த வீரனாகக் கருதப்பட்ட கொப்பேகடுவாவும் மற்றும் ஒன்பது அதிகாரிகளும் கொலையுண்டது தொடர்பாகக் கடுமையான சந்தேகம் தெரிவித்திருந்தார் திருமதி லலி கொப்பேகடுவ. ஆனால் ஒரு தரப்பு செய்தி மட்டுமே தெரிவிக்கப்படலாயிற்று. ரூபவாஹினியில் ஒளிபரப்பான விசேட அறிவித்தல் ஒன்றில் வெளிநாட்டு விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைக்க அரசாங்கம் முன்வந்திருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் அரசாங்கம் இத்தகைய கமிஷன் ஒன்றை அமைக்க ஏன் முன் வந்தது என்பது சுட்டிக்காட்டப்படவில்லை.

இதன் மூலம் ரூபவாஹினியும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், தகவல் திணைக்களமும், எப்படிச் செயற்படுகின்றன என்று காமினி பொன்சேகா கூறியது தெளிவாகின்றது.

## அன்னாசி இலையிலிருந்து துணி கோயம்புத்தூரில் கண்டுபிடிப்பு

(கோயம்புத்தூர்)

அன்னாசிச் செடியின் இலைகளிலிருந்து துணி வகைகள் தயாரிக்க முடியும் என்று கோயம்புத்தூரிலுள்ள ஜவுளி ஆராய்ச்சி சங்கத் துணை இயக்குனர் துரைச்சாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; அன்னாசிச் செடியின் கழிவுகளிலிருந்து காகித அட்டைகளையும், எபுசம் கற்களையும் தயாரிக்க முடியும் என்றும் தெரிவித்தார். இந்தியாவில் 87,000ஹெக்டேயர் பரப்பில் அன்னாசி செய்கை பண்ணப்படுவதாகவும் இவற்றைப் பயன்படுத்தி ஆண்டுக்கு ஆறுலட்சம் தொன் துணிகள் தயாரிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிச் சங்கம் தற்போது இந்தப் புதிய துணிவகையின் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதாகவும், பொருளாதாரச் சந்தை வாய்ப்பை பொறுத்து இத் திட்டம் மேலும் விரிவாக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

# மத்திய அரசின் தடை உத்தரவை கண்டிப்புடன் அமுல் படுத்துக

### - மாநில அரசுகளுக்கு அமைச்சர் ஆலோசனை

(டில்லி)

விஷ்வ இந்து பரிஷத் மற்றும் ஆர் எஸ் எல். உட்பட ஐந்து அமைப்புக்களுக்கும் மத்திய அரசு பிறப்பித்த தடை உத்தரவை கண்டிப்பாக அமுல் நடத்துமாறு மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பம்பாயில் மாநில அரசின் மூத்த அதிகாரிகளிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில்; தேவைப்பட்டால் மாநில அரசுகள் சிறப்பு நீதிமன்றங்களை அமைக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அங்கு செய்தியாளர் மத்தியில் பேசும் போது அவர் பொலிஸ் படையின் மதச் சார்பற்ற தன்மையை பேணிப் பாதுகாக்க ஆள் திரட்டும்

## மதத்தலைவர் நடுநிலைமை

## போலி அடையாள அட்டை தயாரித்த இடம் கண்டு பிடிப்பு

(கொழும்பு)

போலி அடையாள அட்டைகள் தயாரிக்கும் இடமொன்று நிட்டம்புவவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெள்ளவத்தையில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழ் இளைஞர்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து இந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

நிட்டம்புவ நகருக்கு அண்மையிலிருந்த பாழ் அடைந்த வீடொன்றிலுள் மேற்படி நிலையம் அமைந்திருந்ததாகவும், அரை குறையாக இருந்த 300க்கு மேற்பட்ட அடையாள அட்டைகளும் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இத்துடன் தேசிய ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரின் போலிக் கையொப்பம் உள்ள றபர்சீல் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதையடுத்து இது உற்பத்தி செய்த இடம் அச்சிட்ட அச்சகம் ஆகியவற்றையும் பொலிசார் தேடுகின்றனர்.

இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களில் வெளி

கெதிரான போராட்டமும் - சாத்வீகப் போராட்டங்கள் உட்பட - இன்று நேற்று தொடங்கியதல்ல. அடக்கு முறைக்கு எதிரான போராட்டத்தை ஆரம்பித்து வைத்தவர்கள் புலிகளும் அல்ல. தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டம் வரலாற்றின் கட்டாயத்தினால், தவிர்க்கப்பட முடியாமல் உருவானது. அவ்வாறு உருவான போராட்டம் சாத்வீக வழியில் இருந்து ஆயுதப் போராட்டமாக மாறும் நிலை உருவான போது அதற்கு தலைமை தாங்கியவர்களே விடுதலைப் புலிகள். அதாவது வரலாற்றின் நிர்ப்பந்தத்தால் உருவான ஆயுதப் போராட்டத்திற்கு விடுதலைப் புலிகள் தலைமை தாங்கி நடத்தி வருகின்றனர்.

இதே போல், தமிழரின் தனி நாட்டுக் கோரிக்கையும் தவிர்க்க முடியாத ஒன்றாக, தமிழரின் பாதுகாப்பிற்கு ஒரே ஒரு மாற்றீடு தனிநாடு அமைத்தல் என்ற நிர்ப்பந்தத்தினால் உருவானதே. அதாவது, மொழியுரிமை, சமஷ்டி அமைப்பு, தனிநாடு எனபடிமுறை வளர்ச்சியின் பால் வந்ததே ஒழிய ஆங்கிலேயர் நாட்டை விட்டு வெளியேறிய உடன் திடீரென உருவானதொன்றல்ல. அதாவது, சிங்கள பேரினவாத சக்திகளுடன் இணைந்து வாழ முடியாது என்பது கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு எழுந்ததே ஆகும். அதாவது தமிழீழக்கோரிக்கை என்பது திடீரென வானத்தில் இருந்து வீழ்ந்த தொன்றல்ல.

இவ் வரலாற்றுப் பாடத்தின் அடிப்படையில் தான் இனப் பிரச்சினைக்கு தமிழ்மக்கள் சுதந்திரமாகவும், பாதுகாப்புடனும் வாழத்தக்க நிரந்தரத் தீர்வு ஒன்றுகாணப்படவேண்டும்என்ற நிலைப்பாட்டிற்கு விடுதலைப் புலிகள் வந்தனர். அத்தோடு. காலம் காலமாக சிறிலங்காப் பேரினவாதம் தமிழ் மக்களை ஏமாற்றியதனைப் தெளிவாகப் புரிந்து கொண்டு மீண்டும் ஒருமுறை தமிழினம் ஏமாற்றப்படக்கூடாது என்பதில் தீவிர அக்கறையாகவும் செயற்பட்டுள்ளனர்.

இதைவிடுத்து விடுதலைப் புலிகள் இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு முட்டுக்கட்டையாக உள்ளனர் எனக்கூறுவது ஏற்புடையதொன்றல்ல. விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்று நடத்தத் தயாராக இருப்பதாகவே தெரிவித்து வருகின்றனர். ஆனால், தமிழரின் தாயகமும், பாதுகாப்பும் விட்டுக் கொடுப்பிற்கும் பேரம் பேசுவதற்கும் அப்பாற்பட்டவை என விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் இந்நிலைப்பாடு சரியானது என்பதை பிரேமச்சந்திரன் போன்றவர்களும் தவிர்க்க முடியாது. இன்று ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது. விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு சரி என்று இல்லாவிட்டால் பிரேமச்சந்திரன் கூறியிருப்பது போல் எவ்வாறு தமிழ்மக்களின் செல்வாக்கு விடுதலைப் புலிகளுக்கு, அதிகரிக்கக் கூடும்?

ஒரு இனத்தின் போராட்ட சக்திகள் எப்பொழுதும் முன்னே நாக்கியதாக, ஏறு வரிசையில் வளர்ச்சி காணவேண்டும். அதைவிடுத்து பின்நோக்கியதாக காட்டிக் கொடுப்பு மிக்கதாக, இறங்கு வரிசையில் இருக்குமானால், அவர்கள் தோல்வி காண்பது தவிர்க்க முடியாதது. இந்நிலையில், போராட்டத்தை பின் நோக்கி இழுத்துச் செல்ல முற்படும் தமிழ்க் குழுக்கள் தமது தோல்வியை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். இது தவிர்க்க முடியாதது.

---

தனது நாட்டின் உதவியைப் பெற்ற ரூபவாஹினி குறித்து

சேகா திருப்திப்படவில்லை. அத்துடன் அரசு ஆதரவுடன்

மைகள் மோசமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர் குறிப்பிட்டார்.

---

# மத்திய அரசின் தடை உத்தரவை கண்டிப்புடன் அமுல் படுத்துக

## - மாநில அரசுகளுக்கு அமைச்சர் ஆலோசனை

(டில்லி)

விஷ்வ இந்து பரிஷத் மற்றும் ஆர் எஸ் எஸ். உட்பட ஐந்து அமைப்புக்களுக்கும் மத்திய அரசு பிறப்பித்த தடை உத்தரவை கண்டிப்பாக அமுல் நடத்துமாறு மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் மாநில அரசுகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பம்பாயில் மாநில அரசின் மூத்த அதிகாரிகளிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில்; தேவைப்பட்டால் மாநில அரசுகள் சிறப்பு நீதிமன்றங்களை அமைக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அங்கு செய்தியாளர் மத்தியில் பேசும் போது அவர் பொலிஸ் படையின் மதச்சார்பற்ற தன்மையை பேணிப் பாதுகாக்க ஆள் திரட்டும் முறையையும், பயிற்சி அளிக்கும் முறையையும் திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் வந்து விட்டதாகவும் குறிப்பிட்டார்.

## மதத்தலைவர் நடுநிலைமை கடைப்பிடிக்க வேண்டும்

### -மார்க்சிய கம்யூனிஸ்ட் கோரிக்கை

காஞ்சிசங்கராச்சாரியார்ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள போன்ற மதத் தலைவர்கள் நடுநிலைமையாக நின்று பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலவேண்டும் என்று இந்திய மார்க்சியக்கட்சியின் தமிழ் மாநிலக் குழுச்செயலாளர் நல்லசிவன் தெரிவித்துள்ளார்.

பாபர் பகுதி இடிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் பகுதிகட்டக் கூடாது என்று காஞ்சி சங்கராச்சாரியார் கோரக் கூடாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாபர் மசூதி உடைப்பு;

## இஸ்லாமிய மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டும்

### பங்களாதேஷ் கோரிக்கை

(டாக்கா)

அயோத்தி பாபர்மசூதி உடைக்கப்பட்டது குறித்து அடுத்த இஸ்லாமிய மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டும் என்று பங்காளதேசின் வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஐ. நா. மன்றத்திலும் இந்தச்சம்பவம் குறித்துப் பேச வேண்டும் என்று கேட்கப் போவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இனக்கலவரம் அதிகரிக்காமல் இருப்பதற்கு அனைத்துவக மட்டத்திலான நாடுகளுக்கு அறிவிக்கவேண்டியது அவசியம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானும், பங்களாதேஷும் தனித்தனியாகமற்ற நாடுகளுடன் அயோத்தியா விவகாரம் குறித்துப் பேச்சுவார்த்தைநடத்த வேண்டும் எனஇருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

மாநிலங்களில் ஆளும்

## பாரதீய ஜனதா தலைமைகளும் தடையை ஏற்றன

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியிலிருக்கும் மூன்று மாநிலங்களிலும் மாநில அரசுகள் மத்திய அரசு இவ்வாதக் குழுக்கள் மீது விதித்த தடையை எதிர்க்கவில்லை.

மேற்படி மாநில அரசுகள் உள்ளூர் நீதி மன்றங்களிடம் மத்திய அரசின் தடையை அதிகார பூர்வமாக அறிவித்துள்ளன.

எனினும் மற்ற மாநிலங்களில் இடம் பெற்றது போல அலுவலகங்கள் மூடப்பட்டு, சீல்வைக்கப்படவோ அல்லது பெரும் எடுப்பிலான கைதுகளோ பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களில் இடம் பெறவில்லை என்று ஏஜென்சிச் செய்திகள் கூறுகின்றன.

## குண்டு வீச்சு தீ வைப்பு

(லண்டன்)

கிழக்கு லண்டன் பகுதியில் நேற்று முன்தினம் காலை பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட எரிகுண்டுத்தாக்குதல் தொடர்பாகப் பொலிசார் இருவரை விசாரித்து வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை நடந்த சம்பவத்தில் தென்மேற்கு லண்டனிலுள்ள ஒரு இந்துக் கோயிலுக்குத் தீ வைக்கப்பட்டது. இரு சம்பவங்களிலும் எவரும் காயமடையவில்லை.

சுப்பிரமணிய சுவாமிக்கு எதிராக !

## சென்னை நீதிமன்றமுன்பாக பெரும் ஆர்ப்பாட்டம்

ஜனதாக்கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமிக் கெதிராக சென்னையில் ஆபாச கோசங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

சென்னையில் உள்ள நீதிமன்றத்துக்குச்சென்று கொண்டிருந்த சுப்பிரமணிய சுவாமியை ஒரு குழுவினர் வழிமறித்து இக்கோசங்களை எழுப்பினர்

தமிழக முதலமைச்சர் தாக்கல் செய்திருந்த அவதூறு வழக்கு சம்பந்தமாக மேற்படி நீதிமன்றத்துக்குச் சென்று கொண்டிருந்த இவரையும் இவருடன்சென்றதிரு. ராஜாராம். பி. எச். பாண்டியன். ஆகியோருக்கெதிராகவும் இவ் ஆபாசக்கோசங்கள் எழுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. பின்னர் இச்சம்பவம் குறித்து மேற்படி நீதிமன்றத்தில் முறையிடப்பட்டதாகவும் தமதுதரப்பினருக்குஉரியபாதுகாப்பு இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

---

## போலி அடையாள அட்டை தயாரித்த இடம் கண்டு பிடிப்பு

(கொழும்பு)

போலி அடையாள அட்டைகள் தயாரிக்கும் இடமொன்று நிட்டம்புவவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது வெள்ளவத்தையில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இரண்டு தமிழ் இளைஞர்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து இந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

நிட்டம்புவ நகருக்கு அண்மையிலிருந்த பாழ் அடைந்த வீடொன்றினுள் மேற்படி நிலையம் அமைந்திருந்ததாகவும், பொலிசார் இவ் இடத்தை முற்றுகையிட்ட போது போலியான சுமார் 200க்கு மேற்பட்ட அடையாளஅட்டைகளும், அரை குறையாக இருந்த 300க்கு மேற்பட்ட அடையாள அட்டைகளும் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இத்துடன் தேசிய ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரின் போலிக் கையொப்பம் உள்ள றபர்சீல் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதையடுத்து இது உற்பத்தி செய்த இடம் அச்சிட்ட அச்சகம் ஆகியவற்றையும் பொலிசார் தேடுகின்றனர்.

இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலைய உரிமையாளர், தமிழரான உப தபால் அதிபர் ஆகியோரும் அடங்குவர்.

## சேருவாவெல பௌத்த ஆலயம் விரைவில் புனரமைக்கப்படும்

### - பௌத்தசாசன பதில் அமைச்சர் லால்கமகே

(கொழும்பு)

சேருவாவெல பகுதியிலிருக்கும் பௌத்த ஆலயமும் அதன் சுற்றாடலும் வெகுவிரைவில் சுத்திகரிப்பு செய்யப்படவுள்ளது. இப்பகுதி கடந்த ஐந்நூறுஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்ட நிலையில் காடுகள் மலிந்து போயிருப்பதாகவும் கூறப்படுகிறது. இலங்கையின் மிகப் புராதன புத்த தலங்களில் இதுவும் ஒன்று எனவும் இந்தப் பகுதியைச் சுத்திகரித்துப் பழைய கீர்த்தி நிலைக்குக் கொண்டு வர வேண்டுமெனவும் புத்தசாசன பதில் அமைச்சர் லால் கமகே கூறியுள்ளார்.

திருக்கோணமலை மாவட்டத்தின் மூதூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் சேருவாவெல உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கு யுத்தம் விரைவில் முடிய வேண்டும்

### - சந்திரிகா குமாரணதுங்க

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு யுத்தத்தினால் சிங்கள தமிழ் இளைஞர்கள் பெருமளவில் தமது உயிர்களை இழக்கின்றனர். இந்த நாடு அதிகளவில் இளைஞர்களை இழந்து வருகிறது. எனவே வடக்கு கிழக்கு யுத்தத்தை விரைவில் முடிவுக்கு கொண்டுவர வேண்டும். இவ்வாறு திருமதிசந்திரிகா குமாரணதுங்கா ரத்தொளுவ பகுதியில் பொதுக்கூட்டமொன்றில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; சரியாக வழிநடத்துவதற்குரிய தலைவர்கள் இந்நாட்டில் இப்போதில்லை. வடக்கு, கிழக்கு பிரச்சினை தொடர்பாக சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தான் முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் வவுனியாவில் கம் உதாவ

(கொழும்பு)

வவுனியாவில் எதிர்வரும் ஆண்டின் நடுப்பகுதியில் நடத்தப்படவுள்ள முன்மாதிரி கம் உதாவ கண்காட்சிக்கென ஆறு கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் செயலகம் தெரிவித்துள்ளது.

வவுனியா வடக்கு சிங்களப் பகுதியைச் சேர்ந்த மகாமயிலங்குளம், அறுகம்புல் எலிய, திக்வெவ ஆகிய கிராமங்களும் வவுனியா வடக்கு தமிழ்ப் பகுதியை சேர்ந்த ரம்பக்குளம், பண்டாரிகுளம், குமாங்குளம் ஆகிய கிராமங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

# ஈழநாதம்

## சமஷ்டியால் சிங்களக் குழந்தைகள் அடிமையாக வேண்டி வருமாம்

### காலி மாவட்ட எம். பி. யின் அச்சம்

(கொழும்பு)

"எமக்கிடையே ஒற்றுமை இல்லா விட்டால் எதிர்கால த்தில் சிங்களவரின் பிஞ்சுக் குழந்தைகள் புலிகளின் தமிழீழ அரசின் அடிமைகளாக வாழவேண்டிய நிலை ஏற்படும். எனவே நாம் ஒட்டு மொத்தமாக சமஷ்டித்திட்டத்தை எதிர்க்க வேண்டும்"

இவ்வாறு காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ரமகுமாரநாணயக்கார தெரிவித்துள்ளார்.

காலியில் உள்ள விகாரை ஒன்றில் சிறுவர்களுக்கான சமயக்கல்வித்திட்டம் ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும் போதுதற்போது சமஷ்டியைப் பற்றி பலரும் கதைத்துக் கொள்கிறார்கள். இத்திட்டம் தமிழீழ அரசுக்கான முதற்படி என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இந்த சமஷ்டித் திட்டத்தின்படி தீர்வு அமைந்தால் நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை பிரித்துத் தமிழர்களுக்குக் கொடுத்ததாக முடிந்து விடும். அதை அவர்கள் கதிர்காமம் வரைக்கும் விஸ்தரிப்பார்கள். அத்துடன் மலையகப் பிரதேசத்தையும் ஆக்கிரமித்து மலைநாடு ஒன்றையும் அமைத்து விடுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார். 1923-ம் ஆண்டிலேயே தமிழீழம் பற்றிய கோஷம் எழுந்தது. அப்பொழுதும் சுதந்திரத்தின் பின்னரும் எமது தலைவர்களான டி. எஸ் சேனநாயக்கா, எஸ் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் தமிழீழ கோரிக்கையையும், சமஷ்டித் திட்டத்தையும் எதிர்த்தே வந்திருக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கட்டுநாயக்கா

## வர்த்தகவலையத்தில் அடிக்கடி வேலை நிறுத்தம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயப்பகுதியில்தற்போது அடிக்கடி வேலை நிறுத்தம் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் இருக்கும் தொழிற்சாலைகளில் கடமையாற்றும் பெண் ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாகவும் இதனால் எழும் நிலைமைகளை கட்டுப்படுத்த அடிக்கடி பொலிசாரை அழைக்க வேண்டி ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த வாரத்தில் மட்டும் நான்கு தொழிற்சாலைகளில் இவ்விதம் வேலை நிறுத்தம் நடத்தப்பட்டதாக தெரியவருகிறது

அரசாங்கம் தற்போது திறந்துவரும் ஆடைத் தொழிற்சாலைகளில் ஆரம்ப வேதனமாக ரூபா 2000 வழங்கப்படுகையில், சுதந்திர வர்த்தக வலயத்தில் பல ஆண்டுகால அனுபவம் உடையவர்கள்கூட மாதாந்தம் ரூபா 3000 ஐ தானும் பெற முடியாதிருப்பதாக அப்பெண்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## "வெளிச்சம்" இன்று வெளிவருகிறது

வெளிச்சம் கார்த்திகை மாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழில் புதுவை இரத்தினதுரை அவர்களின் தலைவன் வாழி - தலைவருடைய பிறந்ததின வாழ்த்துக் கவிதையும், முருகையன், கவிஞர் கண்ணதாசன், சி.சிவஞானம், அரியாலையூர் கேந்திரன் ஆகியோரின் கவிதைகளும், ந. சுரேந்திரனின் மொழிபெயர்ப்பில் சீனச்சிறு கதை ஒன்றும் மற்றும் கிருஷ்ணா மங்கை, கருணாகரன் ஆகியோரின் சிறுகதைகளும் உள்ளன.

இவற்றுடன் கரும்பறவை, சாந்தி, பரஞ்சோதி ஆகியவர்களின் போராட்ட நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகளும், யமுனாரி எழுதிய நல்லூர் இராசதானி என்ற கட்டுரையும் இடம் பெற்றுள்ளன.

## பனைவிதை விநியோகம்

பனை வளத்தை பெருக்கும் நோக்குடன், சுமார் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட பனம் விதைகளைக் கொள்வனவு செய்து தமது பகுதி மக்களுக்கு பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் விநியோகித்துள்ளது.

சங்கத்தின் இச்செயற்பாட்டைப் பாராட்டி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் செய்திக்குறிப்பொன்றை விடுத்துள்ளது.

# இந்து அடிப்படைவாதிகள் ஆயிரக்கணக்கில் கைது

## தலைவர்கள் தலைமறைவு

(டில்லி)

ஐந்து அமைப்புக்களை மத்திய அரசு தடை செய்ததை அடுத்து இந்தியப் பொலிசார் தொடர் நடவடிக்கையாக பல மாநிலங்களில் தடை செய்யப்பட்ட அமைப்புக்களைச் சேர்ந்த தொண்டர்களைக் கைது செய்து வருகின்றனர்.

உத்தரப்பிரதேசத்தில் மாத்திரம் ஆயிரத்திற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாரதிய ஜனதாக்கட்சி ஆட்சியிலிருக்கும் மாநிலங்களில் கைது நடவடிக்கை தீவிரமடைகிறது.

கைது செய்யப்படுவதற்கு அஞ்சி இந்து அடிப்படைவாத அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் பலர் தலைமறைவாகி விட்டதாகவும் தெரிய வருகிறது. தலைவர்கள் எவரும்இது வரை கைதாகவில்லை என லக்னோ செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் நாட்டில் தடை செய்யப்பட்ட ஐந்து அமைப்புகளில் மூன்று அமைப்புக்களைச் சேர்ந்த நூறுபேரைத் தமிழ் நாடு பொலிசார் நேற்றுக் கைது செய்தனர். இந்த இயக்கங்களின் வங்கிக் கணக்குகள் நிறுத்தப்பட்டதாகவும். அலுவலகங்களுக்குச் சீல் வைவக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களிலும் இதே மாதிரி நடவடிக்கைதான் மேற்கொள்ளப்படுகிறது.

அலுவலகங்களைச் சீல் வைப்பது குறித்துப் பாரதிய ஜனதாக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது புதுடில்லியில் செய்தியாளரிடம் பேசிய கட்சியின் தலைவர் எஸ். எஸ். பண்டாரி, எந்தச் சட்டத்தின் கீழ் இந்த அமைப்புகள் தடை செய்யப்பட்டனவோ அந்தச் சட்டம் அலுவலகங்களை மூட அனுமதிக்கவில்லை என்றார்.

## பிரேமா நாடு திரும்பினார்

(கொழும்பு)

மூன்று நாள் விஜய மொன்றை மேற்கொண்டு பங்களாதேஷ் சென்றிருந்த சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா நேற்று நாடு திரும்பினார். ஜனாதிபதி பங்களாதேஷில் தங்கியிருந்த சமயம் பாகிஸ்தான் பிரதமர், பங்களாதேஷ் பிரதமர் ஆகியோருடன் முத்தரப்புப் பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருந்தார்.

கந்துல

ம்பு துறைமுகத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டது.

மன்னாரில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் அவசரத்தேவைக்கென பெருமளவு இராணுவ தளபாடங்களுடனும் வெடிப் பொருள்களுடனும் சென்று கொண்டிருந்த இத் தரையிறங்கும் கப்பல் மூழ்கியது தெரிந்ததே.

இதிலிருந்த இராணுவ தளபாடங்களும் வெடிப்பொருள்களும் மீட்கப்பட முடியாத நிலையில் கடற்படையினரதும் துறைமுக அதிகார சபையினரதும் பெருமுயற்சிக்கு பின்னர் கொழும்பு துறைமுகத்திற்கு இழுத்துச்செல்லப் பட்டுள்ளது.

தபால் சேவையை

உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்துவதற்காக வடமாகாணதபால் அத்தியட்சர் எஸ்.எம். சேதுகாவலர் இன்று கொழும்பு செல்ல உள்ளார். (07)(பா)

பாகிஸ்தானில்

## இந்து கோவில்மீது தாக்குதல் பாரதீய ஜனதா எதிர்ப்பு

பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த சுமார் ஆயிரத்தி ஐந்நூறு பேர் நேற்றுப் புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். பாகிஸ்தானில் ஐம்பது இந்துக் கோவில்கள் தகர்க்கப்பட்டதைக் கண்டித்தே இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களில் நூறு பேர் வரையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## மத்திய பிரதேச அரசை பதவி நீக்க கோரிக்கை

(டில்லி)

மத்தியப் பிரதேச முதலமைச்சர் சுந்தர்லால் பட்வாலை பதவி நீக்கம் செய்யும்படி பிரதேச காங்கிரஸ் குழு மாநில ஆளுநரை வலியுறுத்தியிருக்கிறது.

தடை விதிக்கப்பட்ட அமைப்புக்களுடன் அவருக்குத் தொடர்பிருப்பதாக காங்கிரஸ் குழு குற்றம் சாட்டியிருக்கிறது.

மத்திய பிரதேஸ், ஹிமாசல் பிரதேஸ், ராஜஸ்தான் மாநிலங்களின் பாரதீய ஜனதாக் கட்சி அரசுகளை நீக்குமாறு சமாஜவாதக் கட்சியும் வெஜன சமாஜவாதக் கட்சியும் மத்திய அரசைக் கேட்டுள்ளன.

## இடம்பெயர்ந்த ஆசிரியருக்கு நிரந்தர இடமாற்றம்

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணங்களில் இருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து பிறமாவட்டங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அந்தந்த மாவட்டங்களுக்கு நிரந்தர இடமாற்றம் வழங்கப்படவிருக்கிறது.

இவ்வாறு இடம்பெயர்ந்து பிறமாவட்டங்களில் கடமையாற்றி வரும் ஆசிரியர்களில் நிரந்தர இடமாற்றம் வழங்குவதற்குத் தகுதியானவர்களது விபரங்கள் கல்விச்சேவைகள் சபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவல்களை வடகிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு நல்லையா தெரிவித்தார்.

## ஒலிபெருக்கி திருடியவர் பகிரங்கப்படுத்தப்பட்டார்

மாவீரர் வாரத்தில் ஆனைக்கோட்டைப் பகுதியில் திருட்டுப்போன 'யூனிற்' ஒலிபெருக்கிக் கருவியைத் திருடிய நபர் பொதுமக்கள் மத்தியில் பகிரங்கப் படுத்தப்பட்டார்.

ஆனைக்கோட்டை உதயதாரகை சனசமூக நிலையப் பகுதியில் திருட்டுப்போன மேற்படி கருவியைத் திருடியவரை விடுதலைப் புலிகள் விசாரணை செய்து கண்டறிந்தனர்.

பிற்பாடு உதயதாரகை முன்றலில் ஞாயிறன்று பொது மக்கள் முன்னிலையில் அவரைப் புலிகள் பகிரங்கப்படுத்தினர். (21)

## போதைவஸ்து வழக்கு ஆஜராவதில்லை

### சட்டத்தரணிகள் முடிவு

போதைவஸ்து வழக்குகளில் ஆஜராவதற்கு அம்பாந்தோட்டை சட்டத்தரணிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

அடிக்கடி சம்மந்தப்படுபவர்கள் சார்பாக நீதிமன்ற வழக்குகளில் ஆஜராவதில்லையென்று இச்சட்டத்தரணிகள் முடிவு செய்துள்ளனர்.

## பிரேமாவின் இந்திய விஜயம் ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் இந்திய விஜயம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. செல்ல இருந்தார். அயோத்தி அசம்பாவிதத்தின் பின்னர் இந்தியாவில் நிலவும் தற்

## எமது இதய அஞ்சலி



### செல்வன் சீ. யோகநாதன்

(4ஆம் வருடம் சித்த மருத்துவத்துறை)

பல்கலையும் கற்க பறந்தோடி வந்தீரோ!
வருடங்கள் நான்காகமுன் சிறகொடிந்தது ஏனோ?
யோகன் அண்ணா! செய்தி கேட்டுத் திகைத்து விட்டோம்
எமது வருகை உம்மை வழியனுப்பத்தானோ?
தண்ணீரில் நீந்தி கரையேறாமலே,
கண்ணீரில் உமது கதை எழுதப்பட்டதோ?

1-ம் வருட மாணவர்கள்
சித்த மருத்துவம்

# எமது இதய அஞ்சலி



## செல்வன் சீ. யோகநாதன்

(4ஆம் வருடம் சித்த மருத்துவத்துறை)

பல்கலையும் கற்க பறந்தோடி வந்தீரோ!
வருடங்கள் நான்காகமுன் சிறகொடிந்தது ஏனோ?
யோகன் அண்ணா! செய்தி கேட்டுத் திகைத்து விட்டோம்
எமது வருகை உம்மை வழியனுப்பத்தானோ?
தண்ணீரில் நீந்தி கரையேறாமலே,
கண்ணீரில் உமது கதை எழுதப்பட்டதோ?

1-ம் வருட மாணவர்கள்
சித்த மருத்துவம்
யாழ் பல்கலைக்கழகம்

(சி/5591)

# மரண அறிவித்தல்

## இராமநாதர் சிவபாதசுந்தரம்

சரவணை மேற்கை பிறப்பிடமாகவும், தாவடியில் வசித்தவருமாகிய இராமநாதர் சிவபாதசுந்தரம் நேற்று (14-12-92) காலமானார். இவர் ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், ஜனகன், யாழினி, ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், இராமநாதர், இராசம்மா ஆகியோரின் புத்திரரும், அசலாம்பிகை, சுந்தரமூர்த்தியின் [கனடா] அன்பு சகோதரரும், சபாரத்தினம், ராஜேஸ்வரி, அழகனார், கருணைவேல், உருத்திரமூர்த்தி, ஸ்ரீதேவி, பத்பநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [15-12-92] காலை 10-00 மணிக்கு நடைபெற்று தாவடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. தயாகரன்

பத்திரகாளி கோவிலடி,
தாவடி.

[3787]

கோட்டைப் பகுதியில் திருட்டுப்போன 'யூனிற்' ஒலிபெருக்கிக் கருவியைத் திருடிய நபர் பொதுமக்கள் மத்தியில் பகிரங்கப் படுத்தப்பட்டார்.

ஆனைக்கோட்டை உதயதாரகை சனசமூக நிலையப் பகுதியில் திருட்டுப்போன ... வரை விடுதலைப் புலிகள் விசாரணை செய்து கண்டறிந்தனர்.

பிற்பாடு உதயதாரகை முன்றலில் ஞாயிறன்று பொது மக்கள் முன்னிலையில் அவரைப் புலிகள் பகிரங்கப்படுத்தினர். (21)

# போதைவஸ்து வழக்கு ஆஜராவதில்லை

## சட்டத்தரணிகள் முடிவு

போதைவஸ்து வழக்குகளில் ஆஜராவதற்கு அம்பாந்தோட்டை சட்டத்தரணிகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

மேற்படி வழக்குகளில் அடிக்கடி சம்மந்தப்படுபவர்கள் சார்பாக நீதிமன்ற வழக்குகளில் ஆஜராவதில்லையென்று இச் சட்டத்தரணிகள் முடிவு செய்துள்ளனர்.

# வர்த்தக ஒப்பந்தத்திற்கு இந்தியா ஆதரவு

(கொழும்பு)

தெற்காசிய வர்த்தக முன்னுரிமை ஒப்பந்தத்திற்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளது.

'சார்க்' நாடுகளுக்கிடையில் வர்த்தக தாராளமயமாக்கலுக்கு வழிவகுக்கும் மேற்படி ஒப்பந்தத்துக்கு இந்தியா தனது பூரண ஆதரவைத் தெரிவிக்கின்றது என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் திரு. பி. எல். பாட்டியா தற்போதய சார்க் தலைவரான திரு. பிரேமதாசாவுக்கு தெரிவித்தார்.

# மசூதியை காக்காதோர் இந்தியாவை காப்பார்களா?

(கொழும்பு)

மு கருணாநிதி

''பாபர் மசூதியைக் காப்பாற்ற முடியாத இந்திய இராணுவம் பாரதநாட்டை எவ்வாறு காப்பாற்றப் போகிறது'' இவ்வாறு தி.மு.க தலைவர் திரு கருணாநிதி கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அயோத்தியில் காணப்பட்ட பாபர் மசூதி இந்துத் தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்டது குறித்து செய்தி நிருபர்களிடம் கருத்துத் தெரிவித்த திரு. கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

# மரண அறிவித்தல்கள்

## சந்தப்பு ஆறுமுகம் சிவராசலிங்கம்

(ஸ்கந்தபுரம், மில் உரிமையாளர்)

பாலாவோடை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஸ்கந்தபுரம், அக்கராயன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு ஆறுமுகம் சிவராசலிங்கம் அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற கந்தப்பு ஆறுமுகம், சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகனும், றஞ்சிதமலரின் அன்புக் கணவரும், பஞ்சலிங்கம் (டென்மார்க்), மனோரஞ்சிதமலர் (கனடா) ஆகியோரின் சகோதரனும், குழந்தைவேல் (கனடா), இராசமலர் ஆகியோரின் மைத்துனரும், K. T. கனகசபையின் மருமகனும் ஆவார்.

## தம்பர் காசிப்பிள்ளை முருகேசு

(T. K M. தம்பு)

வளுப்போடை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், கனகரட்ணம் வீதி வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட தம்பர் காசிப்பிள்ளை முருகேசு அகால மரணமானார். இவர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், சற்குணராசா (சுவிஸ்), பத்மா, ரகுபதிராசா, பரந்தில்லைராசா, யோகராசா, திருச்செல்வி, ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஞானசோதியின் (வர்த்தகர் பதுளை) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஐபாத்துரை, கந்தசாமி, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவர்கள் இருவரும் 6-12-92 அன்று கிளாலியில் நடைபெற்ற படகு விபத்தில் அகால மரணமானார்கள்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

(3785)

இராணுவ தளபாடங்களுடனும் வெடிப் பொருள்களுடனும் சென்று கொண்டிருந்த இத் தரையிறங்கும் கப்பல் மூழ்கியது தெரிந்ததே.

இதிலிருந்த இராணுவ தளபாடங்களும் வெடிப்பொருள்களும் மீட்கப்பட முடியாத நிலையில் கடற்படையினரதும் துறைமுக அதிகார சபையினரதும் பெருமுயற்சிக்கு பின்னர் கொழும்பு துறைமுகத்திற்கு இழுத்துச் செல்லப் பட்டுள்ளது.

### தபால் சேவையை

உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடாத்துவதற்காக வடமாகாணதபால் அத்தியட்சர் எஸ்.எம். சேதுகாவலர் இன்று கொழும்பு செல்ல உள்ளார். (07)(பா)

### வல்வெட்டித்துறை

ஏவப்பட்ட மூன்று ஆட்லறி ஷெல்களில் ஒன்று கடலிலும், இரண்டாவது வல்வெட்டித்துறை அம்மன் ஆலய வெளியிலும் விழுந்தன மூன்றாவது ஷெல் ஆதிகோவிலடிப் பகுதியில் விழுந்து வெடித்ததில் அருகருகே இருந்த இரண்டு வீடுகள் சேதமடைந்தன. ஒரு வீட்டில்இருந்த திருமதி வசந்தி -விஜயசேகரம் (வயது 32) என்றபெண் காயமடைந்தார்.

ஷெல் தாக்குதல் சம்பவத்தையடுத்து இபபகுதி மக்கள் சில மணிநேரம் பதற்றநிலையடைந்தனர். (யோ)

### பலாலி

இராணுவத்தினர் இவ்வாறு தாக்குதல்களை மேற்கொண்டவாறு இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளை கடந்த இரவும் பலாலி இராணுவ முகாமிலிருந்தும் எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

### வீரச்சாவு

முதல்வன்/ஞானவேல் (தேவராசா சிறிராசா - சிவகாமி அம்மன் கோவிலடி, காரைநகர், யாழ்ப்பாணம், எனும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### கிழக்கு

மற்றொரு மூத்த பொலிஸ் அதிகாரியான ஜெயசுந்தர பொலிசாரின் உயர் பயிற்சி நெறிக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

விசேட நடவடிக்கைகள் பணியகம் கலைக்கப்பட்டிருப்பதும், விசேடமாக குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

# இடம்பெயர்ந்த ஆசிரியருக்கு நிரந்தர இடமாற்றம்

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணங்களில் இருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து பிறமாவட்டங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அந்தந்த மாவட்டங்களுக்கு நிரந்தர இடமாற்றம் வழங்கப்படவிருக்கிறது.

இவ்வாறு இடம் பெயர்ந்து பிறமாவட்டங்களில் கடமையாற்றி வரும் ஆசிரியர்களில் நிரந்தர இடமாற்றம் வழங்குவதற்குத் தகுதியானவர்களது விபரங்கள் கல்விச்சேவைகள் சபைத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தகவல்களை வடகிழக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு நல்லையா தெரிவித்தார்.

# பிரேமாவின் இந்திய விஜயம் ஒத்திவைக்கப்பட்டது

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின இந்திய விஜயம் காலவரையறையின்றி ரத்து செய்யப்பட்டுள்ளது இந்தியாவில் உள்ள புத்தகாயாவில நாளை நடைபெறவிருந்த தங்கவேலி அர்ப்பணிப்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக திரு. பிரேமதாசா இந்தியாவுக்குச் செல்ல இருந்தார். அயோத்தி அசம்பாவிதத்தின் பின்னர் இந்தியாவில் நிலவும் தற்போதைய நிலைமைகள் காரணமாக மேற்படி வைபவம் ஒததிவைக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் வரை இவ்வைபவம் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

# இந்திய முஸ்லீம்களை காக்க கூட்டுநடவடிக்கை வேண்டும்

-- பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷரீப்

இந்தியா எங்கிலும் வாழும் முஸ்லிம்களை காக்க ஐ.நாடுகள் சபையின் ஓ. ஐ சி. என்ற இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு நடவடிக்கையில் இறங்க வேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷரீப் அழைப்பு விடுத்துள்ளார்,

இந்திய முஸ்லிம்களைக் காக்கவும், அயோத்தி பாபர் மசூதி உடைக்கப்பட்டது தொடர்பாகவும் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு அண்மையில் கூட இருப்பதாக பங்களாதேசிலிருந்து பாகிஸ்தான் பிரதமர் கூறியுள்ளார்.

### ஷெல்

ரன் ராஜ்குமார் (வயது 26) ஆகியோர் படுகாயமடைந்தனர். மற்றைய இரு எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் குப்பிளான் தெற்கைச் சேர்ந்த ஈ. செல்லம்மா (வயது 46), கனகநாயகம் ரஞ்சினி (வயது 23) ஆகியோர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

14.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7110

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

22-4710, 24-3529, 42-0704, 41-9989, 26-0536, 24-6972, 41-6933, 2-6335.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-2145, 26-5777, 24-4367, 28-5294, 42-9345, 24-5396, 26-2941, 24-3262, 27-2004, 26-1735.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி.31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.